ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2247/11 - 2021 සැප්තැම්බර් මස 29 වැනි බදාදා - 2021.09.29

*2247/11 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

**தென் மாகாண மாகாண சபை**

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 (1) விதிமுறையோடு வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அதிகாரமாகிய நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 248 ஆம் பிரிவின் அடிப்படையில் செய்யப்படும் கட்டளை.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021.08.10 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2240/14 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட,*

*இதற்கு முன்னர் தங்கல்லை நகர சபையின் கௌரவ தவிசாளருக்கு வழங்கப்பட்ட கட்டளைகள் தென் மாகாண ஆளுநராகிய விலியம் விஜேசிங்ஹ கமகே ஆகிய எனக்கு, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 (1) (அ) விதிமுறையோடு வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அதிகாரமாகிய நகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி கீழ்வருமாறு திருத்தி அமைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.*

*"தங்கல்லை நகர சபைக்கு உரித்தான காரியங்களை செய்து கொள்வதற்கான நிதித் தேவைகளை முகாமைத்துவப் படுத்தலிற்காக 2020.12.07 ஆந் திகதி தங்கல்லை நகர சபையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட செலவு மதிப்பீட்டில் இருந்து தொடர்ச்சியான செலவுகளுக்கு மட்டும் பணத்தை செலவிடுவதற்கும் எந்தவித மூலதனச் செலவுகளுக்கும் பணத்தை செலவிடத் தேவைப்படுமிடத்து அதை சபை அங்கீகாரத்தின் மூலம் செய்து கொள்ளுமாறும் இதன் மூலம் தங்கல்லை நகர சபையின் கௌரவ தவிசாளராகிய வர்ணகுலசூரிய படபெந்திகே ஆரியதாச ஆகிய அவர்களுக்கு நான் கட்டளையிடுகின்றேன்."*

*கலாநிதி* **டபிள்யூ. டபிள்யூ. கமகே,**
*ஆளுநர்,*
*தென் மாகாணம்.*

*தென் மாகாண ஆளுநர் அலுவலகம்,*
*கீழ் டிக்ஷன் வீதி,*
*காலி,*
*2021, செத்தெம்பர் 29.*

*10 - 115*